BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## பிக் ப்ராம்ப்ட்டன் (BIG Brampton) கலைஞருக்கான இடம் பற்றிய கருத்தாய்வு

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 23, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரின் கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டுக்கழகம் [Arts, Culture & Creative Industry Development Agency (ACCIDA)], ஆனது நகர் முழுவதிலும் கட்டுபடியாகும் விலையில் உள்ளூர்க் கலைஞர்கள் மற்றும் கலை அமைப்புக்களுக்கு இடங்களை ஏற்படுத்திக்கொடுக்க முனைகிறது; அதற்கான பின்னூட்டக் கருத்து வழங்குவதற்காக, பிக் ப்ராப்ட்டன் (BIG Brampton) கலைஞருக்கான இடம் பற்றிய கருத்தாய்வினை பூர்த்தி செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறது. படைப்பதற்காகவும், படைக்கப்பற்றவற்றை சமர்ப்பிப்பதற்கான இடங்களைப் பெறவும், பயிற்சிப்பணியகங்களை, அலுவலகங்களை, காட்சிக்கு வைக்கும் இடங்களை மற்றும் விற்பனைக்கான இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பது என்பதே ப்ராம்ப்ட்டன் நகர கலைச் சமுதாயத்தினரின் படைப்புக்களுக்கும் வெற்றிக்கும் முக்கியமான விஷயமாகும். குறிப்பாக, கோவிட்-19 தொற்றுப் பரவலின் தாக்கத்திலிருந்து இந்தத் துறை மீட்சி பெற்று வருவது இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது.

பிக் ப்ராம்ப்ட்டன் (BIG Brampton) கலைஞருக்கான இடம் பற்றிய கருத்தாய்வானது செப்டம்பர் 24, வெள்ளிக்கிழமை வரை கிடைக்கப்பெறுகிறது. பங்கேற்கின்ற ஒவ்வொருவரும் கர்ரி'ஸ் ஆர்ட் சப்ளைஸ் (Curry's Art Supplies) நிறுவனத்தின் $100 பரிசு சான்றிதழ் பெற பதிவு செய்யப்படுவார்கள் மற்றும் அனைத்து கலைஞர்களும் கலை அமைப்புக்களும் பங்கேற்க ஊக்கமளிக்கப்படுகிறார்கள்.

ACCIDA என்பது தனித்துவமான ஒரு நிறுவன அமைப்பாகும்; இது, பலதரப்பட்ட நிகழ்ச்சிகள், சேவைகள் மற்றும் ஆதார வளங்கள், மூலமாக வளர்ச்சி பெறச்செய்தல், கொண்டாடுதல் மற்றும் வாதாடுதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதற்காக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் கீழாக ஓசையின்றி செயல்படுகிறது. கலைச் சமுதாயத்திலிருந்து பெறப்படும் பின்னூட்டக் கருத்துக்களைக் கொண்டு, படைப்புக்கான இடங்களின் தேவை உள்ளிட்ட திட்டமிடல் மற்றும் ஆதரவளிப்புக்கு உதவ முடியும்.

ஆகஸ்ட் 26 வியாழக்கிழமையன்று மாலை 6:30 முதல் 8:00 மணி வரை கலைஞர்களுக்கான இடம் பற்றிய ஆன்லைன் கலைச் சமுதாயத்தினரின் வட்டமேஜை மாநாட்டினை ACCIDA ஏற்பாடு செய்து நடத்துகிறது. இந்த இலவச நிகழ்ச்சியானது, ப்ராம்ப்ட்டன் நகர திட்டமிடல் மற்றும் நகர்ப்புற

வடிவமைப்புக் குழுக்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நாடகத் தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட வல்லுனர்கள் கொண்ட குழுவினை அமைத்து, கலைச்சமுதாயத்தினருக்கும் அவர்களுக்கான இடங்களை ஏற்பாடு செய்து ஆதரவளிப்பது பற்றியும் கலந்துரையாடுவார்கள். விபரங்களுக்கும் பதிவு செய்வதற்கும் வருகை தரவும்: accida.ca

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டனின் கலை மற்றும் கலாச்சாரத் தோற்றத்தை வடிவமைப்பதிலும் ஆதரிப்பதிலும் ACCIDA மிகப்பெரிய பங்கு வகிக்கும். இந்த பின்னூட்டத்தை திரட்டுவது என்பது, நமது கலைஞர்களை மற்றும் கலை அமைப்புகளை முன்னோக்கி செலுத்துவதற்கு மிகவும் முக்கியமாகும்; அதன் மூலமாக நமது படைக்கும் சமூகத்தை சிறப்பாக மேம்படுத்த முடியும். அனைவரையும் பங்கேற்குமாறும், தங்கள் கருத்தை தெரிவிக்குமாறும் நான் ஊக்குவிக்கிறேன்! ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ACCIDA நமது கலை சமூகத்தில் தங்கள் பணியைத் தொடங்குவதைப் பார்ப்பதில் நான் பரவசமடைகிறேன். செழித்து வளரக்கூடியப்பான, நம்பிக்கை தரக்கூடிய மற்றும் மதிப்புமிக்க படைக்கும் காட்சியை உருவாக்குவதற்கான அவர்களின் தொலைநோக்குப் பார்வையானது இந்த நகரத்திற்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களின் அன்றாட வாழ்க்கைக்கும் மிகவும் மதிப்பு தருவதாக இருக்கும்.

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத் தலைவர், கார்ப்பரேட் சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழிலானது நகரின் துடிப்புமிக்க பன்முகத் தன்மையின் ஒருங்கிணைந்த பாகமாகும். அவர்களின் பணியானது நமது உள்ளூர்க் கலைஞர்கள் மற்றும் கலை அமைப்புக்களுக்கு ஆதரவளிப்பதில் உதவி செய்து அதன் மூலமாக, ப்ராம்ப்ட்டன் நகரை தமது சொந்த வீடாக பெருமையுடன் கருத முடியும்.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்புகள்**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca